# அரசினர் கலைக் கல்லூரி (தன்னாட்சி)

Re - Accredited (II Cycle) with **'A'** Grade by NAAC

**கும்பகோணம் - 612 002.**

**தொலைபேசி எண் – (0435) 2442149**

தொலை நகல் : (0435) - 2442977

இணையதளம் : www.gacakum.ac.in

மின்னஞ்சல் : gacakum1854@gmail.com

# கையேடு 2022 - 2023

கையேட்டில் குறிப்பிடப்பட்டிருக்கும் வேலை நாட்கள் மாற்றத்திற்குட்பட்டவை

பெயர் :.............................................................

வகுப்பு :.............................................................

சுழல் எண் :.............................................................

# GOVERNMENT ARTS COLLEGE

**(Autonomous)**

**KUMBAKONAM - 612 002**

**TAMILNADU - INDIA**

| | | |
|---|---|---|
| Year of Establishment | : | 1854 (19-10-1854) |
| Autonomous Status | : | (Since 5.8.1987<br>- GO.Ms.No.1269) |
| 1879-80 | : | Silver Jubilee Year |
| 1904-05 | : | Golden Jubilee Year |
| 1954-55 | : | CentenaryYear |
| 2004-05 | : | Cesquicentennial Year |
| AICTE Letter of Viability | : | F.No.TN-85-MCP-CS / 98<br>M.C.A. Approved in July 1998 |

Re - Accredited (II Cycle) with '**A**' Grade
by NAAC in 17 March 2016

# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்த பெரும் தமிழணங்கே தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம் வியந்து செயல்மறந்து
வாழ்த்துதுமே ! வாழ்த்துதுமே !! வாழ்த்துதுமே !!!

**– மனோன்மணியம் பெ. சுந்தரனார்**



# கொடி வணக்கப் பாடல்



தாயின் மணிக்கொடி பாரீர் – அதைத்
தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர் – (தாயின்...)

ஓங்கி வளர்ந்ததோர் கம்பம் – அதன்
உச்சியின் மேல் வந்தேமாதரம் என்றே
பாங்கின் எழுதித் திகழும் செய்ய
பட்டொளி வீசிப் பறக்குது பாரீர் – (தாயின்...)

கம்பத்தின் கீழ் நிற்றல் காணீர் – எங்கும்
காணரும் வீரர் பெருந்திருக் கூட்டம்
நம்பற் குரியர் அவ்வீரர் – தங்கள்
நல்லுயிர் ஈந்தும் கொடியினைக் காப்பர் – (தாயின்...)

**– மகாகவி சுப்பிரமணிய பாரதியார்**

# நாட்டு ஒருமைப்பாட்டு உறுதிமொழி

நாட்டின் சுதந்திரத்தையும் ஒருமைப்பாட்டையும், கட்டிக்காத்து வளப்படுத்த முழுமூச்சுடன் செயல்படுவேன் என்று நான் உளமார உறுதி கூறுகிறேன்.

ஒருபோதும் வன்முறையை மேற்கொள்ளமாட்டேன் என்றும், சமயம், மொழி, வட்டாரம் இவை குறித்து அனைத்து வேறுபாடுகளுக்கும், தகராறுகளுக்கும் அல்லது பிற அரசியல் குறைகளுக்கும் அமைதியான சட்டப்படியான வழிகளில் தீர்வு காண்பேன் என்றும் மேலும் உறுதியளிக்கிறேன்.

# நாட்டுப்பண்



ஜன கண மன அதிநாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப சிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாஹே
தவ சுப ஆசிஸ மாஹே
காஹே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜயஹே ஜயஹே
ஜய ஜய ஜய ஜய ஹே.

**– மகாகவி இரவீந்திரநாத தாகூர்**

# தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி

தீண்டாமை ஒரு பாவச் செயல்
தீண்டாமை ஒரு பெருங்குற்றம்
தீண்டாமை மனிதத் தன்மையற்ற செயல்

# தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி

இந்திய அரசியலமைப்பின்பால் இடைவிடாத உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன் / குடிமகள் ஆகிய நான், நமது அரசியலமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு எவர்மீதும் தெரிந்தோ/தெரியாமலோ சமூக வேற்றுமையை மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைப்பிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியலமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.

# கல்லூரிச் சின்னம்

நாகரிகம் மிக்க இவ்வுலகம் முழுமைக்கும் பெருமையாக உள்ள தாய்நாட்டின் உணர்வு, பண்பாடு, தொன்மை இவற்றின் உருவமாக இக் கல்லூரிச் சின்னம் உள்ளது.

சின்னத்தின் மேற்பகுதியின் நடுவில் அழகிய ஆழி ஒன்று உள்ளது. அது நேர்மையினை உணர்த்தும் அறவாழி. இந்தியாவின் பெருமைமிக்க குறிக்கோள்களின் அழகு, முழுமை, ஒரு தன்மை இவற்றை அது உருவகிக்கின்றது. மேலும் வாழ்க்கைத் தேரினை அறமே செலுத்துகின்றது என்பதையும் அது உணர்த்துகின்றது. அது நம்முன் அழிவற்ற வளமான தன்னம்பிக்கையினை வளர்க்கின்றது. ஆழியின் இருமருங்குகளையும் தாங்கி ஒரே நிலையில் அன்புடன் பிணைந்து நிற்கின்ற இரு யானைகளும் நமக்கு உணர்த்துவது யாதெனில் உயர்ந்த ஒன்றிய சமநிலையும் கல்லூரியின் பெருமையுமே.

குறிப்பிடத்தக்க தூய ஒளி சிந்தும் குத்துவிளக்கு மாணவர்களின் நெஞ்சங்களில் பல தலைமுறைகளாக இக் கல்லூரி ஏற்றியுள்ள கல்வி ஒளியினை உணர்த்துகின்றது. திறந்த நூலுடன் உள்ள புத்தகத் தாங்கி தூய குத்துவிளக்கின் முன் அமைந்து இங்கு மாணவர்கள் தம் உள்ளத்தில் ஏற்றி உடைமையாக்கிக் கொள்கின்ற கலை, அறிவியல் அறிவினைக் காட்டுகிறது. வலிமையான கதையினை ஏந்தியுள்ள கை, வளமான உடலில் தான் வளமான உள்ளம் உண்டு என்பதையும், இளம் மாணவ நெஞ்சங்களில் நம் விளையாட்டுத் திடல்கள் வளர்த்துள்ள நெறியினையும், விளையாட்டு உணர்வையும் வலியுறுத்துகின்றது.

அடுத்து அமைவது இக் கல்லூரியின் எழுச்சி மிக்க தோற்றம். தொன்மையான குருகுலத்தினை நினைவூட்டும் வகையில் இயற்கையான சூழலில் தென்னிந்தியாவின் கேம்பிரிட்ஜாக அமைந்துள்ளது. கல்லூரியின் முன்னால் ஓடுகின்ற அன்னை காவிரி இடையறாத அறிவின் ஓட்டத்தினை உருவகப்படுத்துகின்றாள். மாணவர்களின் அறிவிற்கு உரமிடுகின்றாள். வான் உயர்ந்த மணிக்கூண்டு மாணவர்கள் இங்கு பெறக்கூடிய அறிவின் உயரத்தினையும், குளிர் நிழல் தரும் தொன்மையான மரங்கள் கல்வியின் கனிப்பயனான தொண்டுணர்வினையும், தன்னலம் நீக்குதலையும் உணர்த்துகின்றன.

இக் கல்லூரிச் சின்னத்தின் கீழ் ‘மெய்ப்பொருள் கல்வி’ என்ற தொடர் மிகப்பொருத்தமாகப் பொறிக்கப்பட்டுள்ளது. நம் வாழ்வில் இலக்கியங்களில் பதிந்து ஒளி வீசுகின்ற அழிவற்ற பேருண்மையின் முடிந்த முடிவு கற்றலேயாகும். நிலைத்த உண்மையான கடவுளை உணர்த்தலும் அதுவே. இக் கல்லூரிச் சின்னம் மேற்கண்ட உன்னதமான பெருமைகளுடன் நிறைந்து எல்லையற்ற பேரறிவினைத் தேடுகின்ற முடிவற்ற தேடலில் ஈடுபட்டுள்ள இக்கல்விக் கோயிலின் மாணவர்களையும், ஆசிரியர்களையும் பெரும் வெற்றிக்கு ஊக்குவித்து உயர்த்தட்டும்.

## கல்லூரி வரலாறு

1854 அக்டோபர் 19-இல் தஞ்சை மராட்டிய அரசி அளித்த சில பழைய கட்டடங்களில் ஒரு மாநிலப் பள்ளியாகக் கும்பகோணம் அரசு ஆடவர் கல்லூரி அமைந்தது. இக்கல்வி நிலையத்தின் உயர்வுக்குக் காரணமாக இருந்த திரு. **W.H. போர்ட்டர்** முதல் முதல்வராக நியமிக்கப்பட்டார். இம்முதல்வருடைய முயற்சியினால் கல்லூரியில் சேருவதற்கான தகுதிப்படுத்தும் வகுப்புகளை மட்டும் கொண்டிருந்த அப்பள்ளி 1864-இல் கணிதம், வரலாறு, உடற்கூறுஇயல் ஆகிய படிப்புகள் இணைக்கப்பட்டு இரண்டாம் நிலை கல்லூரியாக தரம் உயர்த்தப்பட்டு சென்னைப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டது. 1867-ல் கல்லூரி மேம்படுத்தப்பட்டு இளங்கலைப் படிப்பில் கணிதம், வரலாறு இரண்டு மட்டுமே கற்பிக்கப்பட்டன. தத்துவப் பேராசிரியர் ஒருவர் நியமிக்கப்பட்டார். 1869-ல் மாணவர்கள் கணிதம், வரலாறு ஆகிய பாடங்களில் முதன்முதலாக இளங்கலைத் தேர்வினை எழுதினர். 1870-ல் இடவசதியின் தேவை உணரப்பட்டு இம்மாவட்ட மக்கள் புதிய கட்டடங்களைக் கட்ட உதவுமாறு வேண்டப்பட்டனர். 1871-ல் கல்லூரிக் கட்டடங்களை விரிவாக்கவும், பழுது பார்க்கவும் ரூபாய் நாற்பதாயிரம் அளிக்கப்பட்டு அரசு கட்டடக்கலை வல்லுநரின் மேற்பார்வையின் கீழ் விடப்பட்டது. கலையழகு மிளிரும் புதிய கட்டடங்களும் நடுவே வானுயர்ந்த மணிக்கூண்டும் 1875 இறுதியில் கட்டி முடிக்கப்பட்டன.

கல்லூரியுடன் இணைந்திருந்த பள்ளி வகுப்புகள் 1882 மார்ச் 31 வரை இருந்தன. 1883-ல் இந்திய அரசு செயலர் அளித்த ஆணையின்படி உயிரியல் தவிர ஏனைய எல்லாப் பாடங்களையும் கற்பிக்க அனுமதி தரப்பட்டது. 1883-ல் கல்லூரித் திடல் விரிவும், முன்னேற்றமும் பெற்றது. குளம் தூர்வாரப்பட்டு ஆழப்படுத்தப்பட்டது. சுற்றுச்சுவர் நெடுகிலும் பல்வகை மரங்கள் நடப்பட்டன. 1885-ல் கல்லூரி உடற்பயிற்சியகம் நிறுவப்பட்டு நிறைவானது. 1888-ல் கல்லூரிக்குள் ஓவிய வகுப்பு தொடங்கப்பட்டது. 1913-ல் ஆங்கில விரிவுரை அறை, இயற்பியல் சோதனைக் கூடம் ஆகியன கட்டப்பட்டன. 1919-ல் தற்போதுள்ள சோதனைக்கூடம் கட்டப்பட்டு, வேதியியல் துறை அதனுள் இடம்பெற்றது. 1928-இல் இயற்பியல் சோதனைக் கூடம் மேலும் விரிவாக்கப்பட்டது.

1930-1931-ல் இரண்டு படகுக் காப்பகங்கள் ஆற்றங்கரையில் கட்டப்பட்டன. 1932-ல் வேதியியல் துறைக் கட்டடம் விரிவாக்கப்பட்டது. கணித விரிவுரை அறை கட்டப்பட்டது. 1937-ல் கல்லூரிக் குளம் மேலும் ஆழப்படுத்தப்பட்டு தூர்வாரப்பட்டது. கல்லூரியின் சுற்றுச்சுவர் நெடுகிலும் உள்ள மரங்கள் அவ்வப்போது வெட்டப்பட்டு புதியவை நடப்பட்டன. பழைய படகுப் போக்குவரத்து மறைந்தது.

1942-43-ல் இக்கல்லூரி இருபாலரும் பயிலும் இடமானது. 1945-ல் இளங்கலை வகுப்புகள் சில நீக்கப்பட்டு இயற்பியல் முதன்மைப் பாடம், கணிதம் முதன்மைப் பாடத்தில் இளமறிவியல் படிப்புகள் தொடங்கப்பட்டன. 1946-ல் இடைநிலைப் படிப்பின் மூன்றாம் பகுதியில் ஒரு பாடமாக இயற்கை அறிவியல் அறிமுகப் படுத்தப்பட்டது. 1947-ல் இளங்கலைத் தமிழ் (குரூப் V), இளமறிவியல், வேதியியல் இரண்டும் சேர்க்கப்பட்டன. 1949-ல் வேதியியல் துறைக்காக ஒரு வாயு தயாரிக்கும் அறையும், ஆழமான கிணறும் அமைக்கப்பட்டன. 1949-1950-ஆம் ஆண்டில் இடைநிலை வகுப்பின் இரண்டாம் பகுதியில் இந்தி விருப்ப மொழியாகக் கொண்டுவரப்பட்டது. 1950-இல் தேர்வுக் கூடம் கட்டவும், 10 வகுப்பறைகள் கட்டவும் அரசு 3.6 லட்சம் அளித்தது. வகுப்பறைகள் 1952-ல் கட்டி முடிக்கப்பட்டன. 1952-1953-ல் இளங்கலைப் படிப்பின் இரண்டாம் பகுதியில் இந்தி விருப்பப் பாடமாயிற்று. இளங்கலை (குரூப் B) திரும்பவந்தது. இக்கல்லூரியின் நூற்றாண்டு சேவையின் நிறைவையொட்டி நூற்றாண்டு விழா 1954 அக்டோபரில் நடைபெற்றது. 1955-ல் வேதியியல் சோதனைக்கூடம் மேலும் விரிவாக்கப்பட்டது. பல்கலைக்கழகப் படிப்பினை மாற்றியமைத்ததற்கேற்ப 1956-1957 முதல் புகுமுகப் படிப்பு கொண்டுவரப்பட்டது. கணிதம், இயற்பியல், இயற்கை அறிவியல், உலக வரலாறு, நிலவியல், தர்க்கவியல், உளவியல் படிப்புகளும் அனுமதிக்கப்பட்டன.

1957-1958 முதல் மாற்றியமைக்கப்பட்ட மூன்றாண்டு பட்டப்படிப்பு கொண்டுவரப்பட்டது. இளங்கலையில் பொருளாதாரம், தமிழ் இரண்டும் முதன்மைப் பாடங்களாகவும், இளமறிவியலில் முதன்மைப் பாடங்களாக வேதியியல், கணிதம், இயற்பியல் ஆகியனவும் அனுமதிக்கப்பட்டன. இளமறிவியலில் உயிரியல் துணைப்படிப்பாகக் கொண்டு வரப்பட்டது. தேர்வுக் கூடம் கட்டுவது தள்ளிப்போடப்பட்டது. 1962-63-ல் உயிரியல் முதன்மைப்பாடப் படிப்புத் தொடங்கப்பட்டது. 1963-64-ல் அரசு மகளிர் கல்லூரி ஒன்று தனியே தொடங்கப்பட்டது. எனினும் அங்கு இல்லாத படிப்புகளைப் படிக்க விரும்பும் மாணவிகள் இக்கல்லூரியில் தொடர்ந்து பயின்று வந்தனர். இயற்கை அறிவியல் பகுதிக்குக் கூடுதலாக இரண்டு அறைகள் 1964-ல் சேர்க்கப்பட்டன. 1965-ல் புகுமுக வகுப்புகளுக்கு இடவசதி தரவேண்டி அறை எண்.28 (தடுப்புச்சுவர் உடையது, தற்போதைய மகளிர் பொது அறை) கட்டப்பட்டது.

1966-67-ல் புகுமுக வகுப்பு கலைப்பிரிவில் ஒரு பிரிவில் தமிழ் மூலம் பயிற்றுதல் தொடங்கப்பட்டது. ஒரு காலத்தில் கணித மேதை இராமானுஜம் பயின்ற தென்னிந்தியாவின் கேம்பிரிட்ஜ் எனப்படும் இக்கல்லூரியில் முதன்முதலில் கணிதம் பட்ட மேற்படிப்புத் தொடங்கப்பட்டது. அடுத்த ஆண்டு பொருளாதாரத்தில் முதுகலை வகுப்பு தொடங்கப்பட்டது. பல்கலைக்கழக மான்யக்குழுவினால் ரூபாய் ஒரு லட்சம் அளிக்கப்பட்டது.

அத்தொகையில் தேர்வுக்கும், கூட்டத்திற்கும் பயன்படும் கூடம், பேராசிரியர்களுக்கும் பட்ட மேற்படிப்பு வகுப்புகளுக்குமான ஆறு அறைகள் ஆகியன ரூபாய் 1,75,000 செலவில்1967-1968-ல் கட்டப்பட்டன. விடுதியில் தங்காத, நாளும் வீட்டிலிருந்து வந்து போகும் மாணவர்களின் தேவைக்காக 1968-ல் பல்கலைக்கழக மான்யக்குழு உதவியான ரூபாய் 50,000/- செலவில் வசதிகள் செய்யப்பட்டன. கூடுதல் கட்டடங்கள் பெருகவே விளையாட்டுத் திடலில் பெரும்பகுதி கட்டடங்களால் நிறைந்தது. கல்லூரியின் விளையாட்டுத் திடலை விரிவாக்க வேண்டி கல்லூரியின் கிழக்காக 5 ஏக்கர் 37,330 சதுரடி பரப்பளவுள்ள இடம் ரூபாய் 95,618/-க்கு 1968-ல் அரசால் விலைக்கு வாங்கப்பட்டது. 1969-ல் அறை எண்கள் 28, 33 (தற்போதைய மகளிர் பொது அறை மற்றும் NSS அறை) இரண்டின் மேலும் இரண்டு அறைகள் கட்டப்பட்டன. 1968-69 முதல் கலைப்பிரிவில் எல்லா வகுப்புகளிலும், இளமறிவியல் ஒவ்வொரு பிரிவிலும் தமிழ்வழி பயிற்றல் தொடங்கப்பட்டது. அப்போது இடைநிலைப் படிப்பில் மூன்று பெண்கள் சேர்ந்தனர். பெருகிவரும் மாணவியர் தொகைக்கு இடமின்மைக் காரணமாகப் பல நாட்களாக எதிர்பார்க்கப்பட்ட பட்ட மேற்படிப்பு, 1969-ல் பட்டப்படிப்பில் எல்லா பாடங்களிலும் தமிழ்வழி பயிற்றல் கொண்டுவரப்பட்டது.

1971-72-ல் விலங்கியல் துறை பட்டப்படிப்பின் தமிழ்வழி, ஆங்கில வழி வகுப்புகளுக்காக மேலும் நான்கு அறைகள் கட்டப்பட்டன. 1972-ல் 15 மாணவர்களுடன் தமிழ் முதுகலைப் படிப்பும், 40 மாணவர்களுடன் இளம் வணிகவியல் படிப்பும் தொடங்கப்பட்டன.

ரூபாய் 91 லட்சம் செலவில் மதிப்பிடப்பெற்ற இயற்பியல், வேதியியல் துறைகளுக்கான பட்ட மேற்படிப்புக் கட்டடங்கள் 1973-ல் கட்டி முடிக்கப்பட்டன. 1974-ல் 30 மாணவர்களுடன் ஆங்கிலம் முதன்மைப் பாடமாகத் தொடங்கப்பட்டது.

1977-ல் 6 மாணவர்களுடன் பகுதி நேர எம்ஃபில் படிப்பு தொடங்கப்பட்டது. முழு நேர எம்ஃபிலும், பி.ஏ. புவியியலும், எம். ஏ. ஆங்கிலமும் ஆரம்பிக்கப்பட்டன. 1980-1981 ஆம் ஆண்டு கணிதத் துறையில் இருந்து புள்ளியியல் துறை பிரிக்கப்பட்டு, துணைப்பாடமாக இயங்கி வருகிறது. 1982-83-ல் எம்.எஸ்ஸி. வேதியியல் வகுப்புத் துவங்கப்பட்டது. 1982-83 கல்வி ஆண்டிலிருந்து இக்கல்லூரி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தோடு இணைவு பெற்றுச் செயல்படுகிறது. 1984-85 கல்வியாண்டிலிருந்து வணிகவியல் பட்ட வகுப்பு மாலை நேரக்கல்லூரியில் தொடங்கப்பட்டது. 1984-85-ல் எம்.எஸ்ஸி. இயற்பியல் பி.ஏ. இந்தியப் பண்பாடு பகுதி நேர எம்ஃபில் ஆங்கில வகுப்பு ஆகிய வகுப்புகள் துவங்கப்பட்டன. 1987-88 கல்வியாண்டில் பகுதி நேர எம்.எஸ்ஸி. விலங்கியல் வகுப்பு துவங்கப்பட்டது. 1987-88 கல்வியாண்டில் பகல், மாலை நேரக் கல்லூரிகள் இரண்டிற்கும் பல்கலைக்கழக மான்யக் குழுவின் ஒப்புதலுடன்

பாரதிதாசன் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த தன்னாட்சிக் கல்லூரியானது. 1988-89 கல்வியாண்டில் பகுதி நேர எம்ஃபில் வேதியியல் வகுப்புத் தொடங்கப்பட்டது. 1994-95 கல்வியாண்டில் எம்.எஸ்ஸி. புவியியல் வகுப்பு துவங்கப்பட்டது. 1998-99 கல்வியாண்டில் எம்.சி.ஏ. வகுப்பும், 2003-04 கல்வியாண்டில் எம்.எஸ்சி. கணிப்பொறியியல், எம்.எஸ்சி. உயிர்வேதியியல் மற்றும் எம்.காம். ஆகிய பட்ட மேற்படிப்பு வகுப்புகள் தொடங்கப்பட்டன.

2003 -ஆம் ஆண்டில் பி.பி.ஏ., பட்ட வகுப்பு தொடங்கப்பட்டது. 2004-05-ல் எம்.ஏ. இந்தியப் பண்பாடு மற்றும் சுற்றுலாவியல் வகுப்பும் தொடங்கப்பட்டது. எம்.ஏ. வரலாறு 2005-2006 கல்வியாண்டில் தொடங்கப்பெற்றது. 2006-2007 கல்வியாண்டு முதல் இளங்கலைப் பட்ட வகுப்புகள் தமிழ். ஆங்கிலம், வணிகவியல் மற்றும் கணிதம் ஆகிய பாடங்களில் சுழற்சி II வகுப்புகள் தொடங்கப்பெற்றன. 2012-2013 ஆம் கல்வியாண்டில் பி.எஸ்ஸி. தாவரவியல் பட்ட வகுப்பும் 2013-14 ஆம் கல்வியாண்டில் பி.சி.ஏ. 2017-18 இல் பி.எஸ்ஸி. புள்ளியியல் பட்ட வகுப்பும், 2018-19 இல் பி.எஸ்ஸி. கணிப்பொறியியல் பட்ட வகுப்பும், தொடங்கப்பட்டன. தற்பொழுது இக்கல்லூரி ஒரு சிறந்த பட்ட மேற்படிப்பு மற்றும் ஆய்வு நிறுவனமாகத் திகழ்கிறது. 2015-2016 ஆம் கல்வியாண்டில் 25, 26, 27.02.2016 ஆகிய நாட்களில் இக்கல்லூரிக்கு இரண்டாவது முறையாக தேசிய தரமதிப்பீட்டுக்குழு (NAAC) வருகை தந்து கல்லூரியைத் தர மதிப்பீடு செய்து 'A' Grade வழங்கியுள்ளதால் 17.03.2016 முதல் 'A' Grade கல்லூரியாகத் திகழ்ந்து வருகிறது.

கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் க. அன்பழகன் அவர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 2018-ல் நான்கு வகுப்பறைகளும், 2019-ல் எட்டு வகுப்பறைகளும் கட்டப்பட்டு பயன்பாட்டுக்கு வந்தன. RUSA கட்டட நிதியிலிருந்து 9 வகுப்பறைகள் கட்டப்பட்டு 2019-ஆம் ஆண்டில் பயன்பாட்டிற்கு வந்தன. 15 வகுப்பறைகள் மற்றும் 2 ஆய்வகங்கள் கொண்ட எம்.ஜி.ஆர். கட்டடம் 2019-ஆம் ஆண்டு பயன்பாட்டிற்கு வந்தது. 7 வகுப்பறைகள் மற்றும் 1 கூட்ட அரங்கு கொண்ட தன்னிறைவு திட்டத்தில் (SSS) கட்டப்பட்ட கட்டடம் 2021-ஆம் ஆண்டு பயன்பாட்டிற்கு வந்தது.

பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் திரு. **T.K.**ரங்கராஜன் அவர்கள் அளித்த நிதியிலிருந்து ஒரு கணினி வகுப்பறை மற்றும் ஓர் ஆராய்ச்சி ஆய்வகம் 2021-ஆம் ஆண்டு பயன்பாட்டிற்கு வந்துள்ளது. விதி 110-ன் கீழ் தமிழக அரசு ஒதுக்கீடு செய்த நிதியில் 3 வகுப்பறைகள் மற்றும் 1 ஆய்வகம் கொண்ட கட்டடம் 2021-ஆம் ஆண்டு கட்டிமுடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு வந்துள்ளது. கல்லூரியில் உள்ள பராம்பரியமான கட்டடங்கள் ரூ.4.18 கோடி செலவில், பழமை மாறாமல் புதுப்பிக்கும் தொழில் நுட்பத்தில் முழுமையாக செப்பனிடும் பணிகள் நடந்து வருகின்றன.

## விடுதி

1882-ஆம் ஆண்டிலேயே விடுதியொன்று கட்டுவதற்குக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. ஆனால் 1905-ல் தான் ரூபாய் 61,000/- செலவில் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டன. விடுதி கட்டுவதற்கான நிதி மறைந்த பிரிட்டன் அரசி விக்டோரியாவின் 50-வது ஆண்டு நினைவாகப் பெறப்பட்டது. கல்லூரியினை அடுத்து உள்ள 9 ஏக்கர் பரப்பளவுள்ள தோட்டத்தில் விடுதி அமைந்துள்ளது. விடுதியில் 100 பேர் தங்கலாம். 1988-89 முதல் அரசு கல்வித்துறை ஏற்று நடத்துகின்றது. இவ்விடுதிக் கட்டடங்கள் தற்போது சிதிலமடைந்த நிலையிலுள்ளதால் வணிகவியல் துறைக்குக் கீழ்ப்பகுதியில் புதிய கட்டடத்தில் புதிய விடுதியாக இயங்கி வருகிறது. மேலும், பழைய விடுதியின் முன்புறத்தில் மகளிருக்கான விடுதி இயங்கி வருகிறது.

## கல்லூரிப் பாலம்

1943-44 கோடையில் கும்பகோணம் கல்லூரி அரண்மனை இராமய்யர் பாலம் கட்டப்பட்டது. பாலத்தின் தூண்கள் 1943-ல் கட்டப்பட்டு அதன்மேல் தற்காலிகமாக மூங்கில் பாலம் போடப்பட்டது. பின்னர் கைப்பிடியுடன் கூடிய பாலம் கட்டப்பட்டது. டாக்டர். கே.சி. சாக்கோ ரூபாய் 300 நன்கொடையளித்தார். கல்லூரியின் பல்வேறு கழகங்கள், விளையாட்டுக் கழகம், கூட்டுறவுக் கழகம், விடுதிக்குழு, பழைய மாணவர் சங்கம் அனைத்தும் சேர்ந்து ரூபாய் 16,000/- நன்கொடையாக அளித்தன. உள்ளூரில் பிரபல வணிகர் திரு. ஏ.ஆர்.அரண்மனை இராமய்யர் பெருந்தொகையான ரூ.55,000/- நன்கொடையாக அளித்தார். பாலத்திற்கு அவரது பெயரிடப்பட்டது. பின்னர் பொதுப்பணித் துறையினரால் மரப்பாலம் அகற்றப்பட்டு உறுதியான கான்கிரீட் பாலம் அமைக்கப்பட்டது.

கடந்த 2006 முதல் பாலம் பழுதடைந்ததால் மாணவர்கள் பயன்படுத்த இயலாமல் மிகவும் சிரமப்பட்டு வந்தனர். இந்நிலையில் மாணவர்களின் நலன்கருதி அன்றைய கூட்டுறவுத்துறை அமைச்சர் மாண்புமிகு. கோ.சி. மணி அவர்கள் ரூபாய் 36.34 இலட்சம் மற்றும் தமிழ் நாட்டரசு அளித்திட்ட ரூபாய் 28.66 இலட்சம் ஆக மொத்தம் ரூபாய் 65 லட்சங்கள் செலவில் புதிய பாலம் 2009 கோடையில் கட்டத் தொடங்கி, 2009-10-ம் கல்வியாண்டின் தொடக்கத்தில் மாணவர்கள் பயனடையும் வகையில் பொதுப்பணித் துறையினரால் சிறப்பாகக் கட்டி முடிக்கப்பட்டது.

## Succession list of Principals

| S.No | Year | Name of the Principals |
|---|---|---|
| 1. | 1854-56 | Hendry Fortoy, Esq B.A., |
| 2. | 1865-57 | E.C.Caldwel Esq. |
| 3. | 1857-62 | T. Marden, Esq B.A., |
| 4. | | T. Gopala Rao, Esq B.A., |
| 5. | | C. Thiruvenkada Naidu, B.A., |
| 6. | 1862-63 | T. Gopala Rao, Esq B.A., |
| 7. | 1863-67 | W.H. Porter, Esq B.A., |
| 8. | | T. Gopala Rao, Esq B.A., |
| 9. | 1867-72 | W.H. Porter, Esq B.A., |
| 10. | 1872-74 | T. Gopala Rao, Esq B.A., |
| 11. | 1874-77 | W.H. Porter, Esq B.A., |
| 12. | 1877-78 | T. Gopala Rao, Esq B.A., |
| 13. | 1878-82 | Rao Bahadur T. Gopala Rao, Esq B.A., |
| 14. | 1882-85 | G.H. Stuart, Esq B.A., |
| 15. | 1885-87 | J.B. Bilderbeck, Esq M.A., |
| 16. | 1887-89 | James Hess, Esq B.A., |
| 17. | 1889-90 | J.B. Bilderbeck, Esq M.A., |
| 18. | 1890-94 | J.H. Stone, Esq B.A., |
| 19. | 1894-95 | E.W. Middlemast, Esq B.A., |
| 20. | 1895-97 | J.B. Bilderbeck, Esq M.A., |
| 21. | | Rao Bahadur Sadhu Seshaiyya, B.A., |
| 22. | 1897-98 | Rao Bahadur C. Nagoji Rao, Esq B.A., |
| 23. | | A.A. Hail, Esq B.A., |
| 24. | 1898-1900 | J.M.Hensman, Esq M.A., |
| 25. | 1900-02 | H.S.Duncan, Esq B.A., |

| S.No | Year | Name of the Principals |
|---|---|---|
| 26. | 1902-04 | J.M. HEnsman, Esq M.A., |
| 27. | | S. Sathiannathan, Esq M.A.,L.T., |
| 28. | 1904-05 | H.S. Duncan, Esq B.A., |
| 29. | 1905-06 | Rao Bahadur C. Nagoji Rao, Esq B.A., |
| 30. | 1906-10 | T.O. Hodges, Esq. |
| 31. | 1910-14 | Y.A. Yates, Esq B.A., |
| 32. | 1914-19 | R.M.Statham, Esq B.A., |
| 33. | 1919-24 | Rao Sahib P. Rajagopala Iyer, M.A., L.T., |
| 34. | 1924-27 | Rao Bahadur P.V. Sashu Iyer, M.A., L.T., |
| 35. | 1927-29 | Rao Bahadur M.C.S.Ananthapadmanaba Rao, M.A., L.T., |
| 36. | 1929- | Rao Bahadur S.E. Ranganathan, M.A., |
| 37. | 1929-31 | Dr. S.R.U. Savoor, Esq M.A.,(Cantab) D.Sc., (London) |
| 38. | 1931-32 | Thiru K.R. Ramaswamy Iyengar, M.A., L.T. |
| 39. | | Thiru K.S. Patracharyar, M.A., L.T. |
| 40. | | Thiru M.S.H. Thomson, Esq. M.A., L.T. |
| 41. | | Thiru Statham, Esq.M.A., L.T. |
| 42. | 1932-38 | Rao Bahadur A. Chakravarthy, M.A., L.T. |
| 43. | 1938-42 | Thiru C.N. Ganapathi Iyer, M.A., L.T. |
| 44. | 1942-45 | Dr. K.C. Chaco, B.A., D.Sc, M.I.E., |
| 45. | 1945-46 | Thiru T.M. Margasahayam Chettiar, M.A., L.T., |
| 46. | 1946-48 | Dr. M. Karamchand Wade, M.A., Ph.D., (London) |
| 47. | 1948-51 | Thiru D.Namasivayam Chettiar, M.A., |
| 48. | 1951-52 | Thiru T.N. Bhima Rao, M.A., L.T., |
| 49. | 1952-52 | Thiru V. Gowri Sankaran, M.A., L.T., |
| 50. | 1952-53 | Major S. Parthasarathy, M.A., |

| S.No | Year | Name of the Principals |
|---|---|---|
| 51. | 1953-54 | Dr. A. Sankaran, M.A., Ph.D., |
| 52. | 1957-57 | Thiru S. Lakshminarayanan, M.A., L.T., |
| 53. | 1957-58 | Thiru S. Syed Yakub, M.A.,L.T., |
| 54. | 1958-60 | Thiru Ignatius Absalam, M.A.,L.T., |
| 55. | 1960-61 | Thiru T. MUniyappan, B.Sc., M.A., M.S.,(Illinois) |
| 56. | 1961-64 | Thiru Mir Shabeer Hussain, M.A., B.T., |
| 57. | 1964-66 | Thiru P.T. Muniyappan, B.Sc., M.A., M.S.,(Illinois) |
| 58. | 1966-69 | Thiru R. Ayyasamy, M.A., L.T., |
| 59. | 1969-71 | Thiru P.T. Muniyappan, B.Sc., M.A., M.S.,(Illinois) |
| 60. | 1971-73 | Thiru S.R. Messiah Doss, M.A., L.T., |
| 61. | 1973-75 | Thiru P.S. James Manickavasagam, M.A., |
| | 1975-76 | Thiru T.S. Gopalakrishnan, M.Sc., (In-Charge) |
| 62. | 1976-77 | Thiru S. Rajan, M.A., B.T., |
| 63. | 1977-78 | Thiru G. Perumal, B.Sc., M.A., |
| 64. | 1978-80 | Thiru M.K. Thangavelu, M.A., M.Lit., |
| 65. | 1980-81 | Thiru G. Devarajalu, B.Com., (Hons.) |
| 66. | 1981 | Thiru K. Varadhan, B.Sc., (Hons.) |
| 67. | 1981-84 | Thiru R. Narasingam, M.A., B.T., |
| 68. | 1984-86 | Thiru K. Seshadri, M.A., |
| 69. | 1986 | Thiru M.A. Aboorvasamy, M.A., D.S.S., |
| 70. | 1986-89 | Thiru A.V. Vaithyanathan, M.A., M.Phil., |
| 71. | 1989-91 | Dr. R. Alalasundaram, M.A., Ph.D., |
| 72. | 1991-92 | Dr. V.B.S. Rajan, M.A., M.Sc., Ph.D., |
| 73. | 1992-93 | Thiru A.V. Vaithyanathan, M.A., M.Phil., |
| 74. | 1993-95 | Thiru C.S. Narasimhan, M.A., |

| S.No | Year | Name of the Principals |
|---|---|---|
| 75. | 1995-97 | Dr. (Selvi) N. Vanajakshi, M.Sc., Ph.D., |
| 76. | 1997-99 | Thiru M. Ananthanarayanan, M.Com., M.Phil., |
| 77. | 1999 - 2001 | Dr. M. Selvaraj, M.Com., Ph.D., |
| 78. | 2002-03 | Thiru S. Shanmuga Sundaram, M.Com., M.Phil., |
| | 2003 | Thiru S.Selvakumar, M.A., M.Phil., Ph.D., (In-Charge) |
| 79. | 2003-04 | Dr. G. Sivanesan, M.Sc., M.Phil., Ph.D., |
| | 2004 | Thiru S. Gnanadesigan, M.Sc., M.Phil., (In-Charge) |
| 80. | 2004-05 | Dr. K. Lalitha, M.Sc., M.Phil., Ph.D., |
| | 2005 | Thiru S. Muthusamy, M.Sc., M.Phil., (In-Charge) |
| 81. | 2005-07 | Mrs. K.Carol Vijaya, M.A., M.Phil., |
| | 2007 | Thiru R.T. Panneerselvam M.Sc., M.Phil., (In- Charge) |
| 82. | 2007-08 | Thiru S. Balakrishnan, M.Sc., M.Phil., |
| | 2008-09 | Dr. P. Rajamanickam, M.Sc., M.Phil., Ph.D., (In-Charge) |
| | 2009-10 | Dr. S. Kanagasundaram, M.Com., Ph.D., (In-Charge) |
| | 2010-11 | Dr. K.C.Srinivasan,M.Sc.,M. Phil.,B.Ed.,Ph.D.,(In-Charge) |
| | 2011-13 | Dr. J. Govindadass, M.A., M.Phil., Ph.D., (In-Charge) |
| 83. | 2013-16 | Dr. K. Mohanasundaram, M.Sc., M.Phil., M.Ed., Ph.D., PGDCA., |
| | 2016 | Major Dr. K.Palanivelu, M.A.,M.Sc.,M.Phil.,M.Ed.,Ph.D.,DCA.,DYHE(In-Charge) |
| 84. | 2016-17 | Dr. N.A. Anbarasan, M.Com., M.Phil., Ph.D., |
| | 2017-18 | Thiru. C. Seetharaman, M.Sc., M.Phil., B.Ed.,P.G.D.C.A (In charge) |
| 85. | 2018 | Dr. Mrs. G. Poongothai, M.Sc., M.Phil., Ph.D., |
| 86. | 2018-19 | Dr. A. Gurusamy, M.Com., M.Phil., PGDCA., Ph.D., |
| | 2019-20 | Dr. P. Sivanesan, M.A., M.Phil., B.Ed., Ph.D., (In-Charge) |
| | 2020 | Dr. R. Rajendran, M.A., M.Phil., PGDE., Ph.D., (In-Charge) |
| 87. | 2020-22 | Dr. K. Duraiarasan, M.A., M.Ed., M.Phil., Ph.D., |
| | 2022 | Thiru. M. Meenakshisundaram, M.Sc.,M.Phil.,B.Ed., (In-Charge) |

## கற்பிக்கப்படும் பாடப்பிரிவுகள்

2005-06-ஆம் ஆண்டு முதல் இளநிலை மற்றும் முதுநிலை பாட வகுப்புகளுக்குத் தெரிவுமுறை கல்வித்திட்டம் (CBCS) செயல்படுத்தப்படுகிறது.

**அ. பட்ட வகுப்புகள் :**

### B.A./ B.Sc. / B.Com. / B.B.A. / B.C.A.

பகுதி I : தமிழ் பகுதி II : ஆங்கிலம்

(பாடப்பிரிவுகளும் ஒப்பளிக்கப்பட்ட இடங்களும்)

| வ. எண் | கற்பிக்கப்படும் பாடப்பிரிவுகள் | சுழற்சி – I | | சுழற்சி – II | | கூடுதல் இடங்கள் |
|---|---|---|---|---|---|---|
| | | பயிற்று மொழிகள் | | | | |
| | | தமிழ் | ஆங்கிலம் | தமிழ் | ஆங்கிலம் | |
| 1. | பி.ஏ., தமிழ் (பிரிவு I-50 இடங்கள், பிரிவு II-50 இடங்கள்) | 100 | - | - | - | 100 |
| 2. | பி.ஏ., ஆங்கிலம் | - | 50 | - | 50 | 100 |
| 3. | பி.எஸ்ஸி., கணிதம் | 30 | 30 | - | 40 | 100 |
| 4. | பி.எஸ்ஸி., இயற்பியல் | 30 | 30 | - | - | 60 |
| 5. | பி.எஸ்ஸி., வேதியியல் (கணிதம், இயற்பியல் துணைப்பாடப்பிரிவு) | 15 | 15 | - | - | 30 |
| | (விலங்கியல், இயற்பியல் துணைப்பாடப்பிரிவு) | 15 | 15 | - | - | 30 |
| 6. | பி.எஸ்ஸி., விலங்கியல் | 30 | 30 | - | - | 60 |
| 7. | பி.எஸ்ஸி., புவியியல் | 30 | 30 | - | - | 60 |
| 8. | பி.எஸ்ஸி., தாவரவியல் | - | 30 | - | - | 30 |
| 9. | பி.சி.ஏ., கணினிப் பயன்பாட்டியல் | - | 40 | - | - | 40 |
| 10. | பி.எஸ்ஸி., புள்ளியியல் | - | 40 | - | - | 40 |
| 11. | பி.எஸ்ஸி.,கணினி அறிவியல் | - | 40 | - | - | 40 |
| 12. | பி.ஏ., பொருளியல் | 50 | 50 | - | - | 100 |
| 13. | பி.ஏ., இந்தியப்பண்பாடு மற்றும் சுற்றுலாவியல் | - | 50 | - | - | 50 |
| 14. | பி.ஏ., வரலாறு | 50 | - | - | - | 50 |
| 15. | பி.காம்.,வணிகவியல் (பிரிவு I-50 இடங்கள், பிரிவு II-50 இடங்கள்) | - | 100 | - | 50 | 150 |
| 16. | பி.பி.ஏ.,வணிக நிருவாகவியல் | - | 60 | - | - | 60 |
| **மொத்த இடங்கள்** | | **350** | **610** | **-** | **140** | **1100** |

**ஆ. பட்ட மேற்படிப்புகள் : M.A., M.Sc., M.Com., M.C.A.,**

**(பாடப்பிரிவுகளும் ஒப்பளிக்கப்பட்ட இடங்களும்)**

| வ. எண் | கற்பிக்கப்படும் பாடப்பிரிவுகள் | சுழற்சி | பயிற்று மொழி | ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் |
|---|---|---|---|---|
| 1. | எம்.ஏ. தமிழ் | I | தமிழ் | 35 |
| 2. | எம்.ஏ. ஆங்கிலம் | I | ஆங்கிலம் | 35 |
| 3. | எம்.எஸ்ஸி. கணிதம்<br>பிரிவு I – 35 இடங்கள்<br>பிரிவு II – 35 இடங்கள் | I | ஆங்கிலம் | 70 |
| 4. | எம்.எஸ்ஸி. இயற்பியல் | I | ஆங்கிலம் | 25 |
| 5. | எம்.எஸ்ஸி. வேதியியல் | I | ஆங்கிலம் | 25 |
| 6. | எம்.எஸ்ஸி. விலங்கியல் | I | ஆங்கிலம் | 25 |
| 7. | எம்.எஸ்ஸி. புவியியல் (Applied Geography) | I | ஆங்கிலம் | 25 |
| 8. | எம்.எஸ்ஸி. கணினி அறிவியல் | I | ஆங்கிலம் | 30 |
| 9. | எம்.எஸ்ஸி. உயிர்வேதியியல் | I | ஆங்கிலம் | 25 |
| 10. | எம்.ஏ. பொருளியல் | I | ஆங்கிலம் | 30 |
| 11. | எம்.ஏ. இந்தியப்பண்பாடு மற்றும் சுற்றுலாவியல் | I | ஆங்கிலம் | 30 |
| 12. | எம்.ஏ. வரலாறு | I | ஆங்கிலம் | 35 |
| 13. | எம்.காம். (Financial Management) | I | ஆங்கிலம் | 30 |
| 14. | எம்.சி.ஏ. (AICTE Approved) | I | ஆங்கிலம் | 30 |
| | **மொத்த இடங்கள்** | | | **450** |

**இ. ஆராய்ச்சிப் படிப்புகள் M.Phil. மற்றும் Ph.D.**

| வ. எண் | துறையின் பெயர் | M.Phil. | | Ph.D. | |
|---|---|---|---|---|---|
| | | முழு நேரம் | பகுதி நேரம் | முழு நேரம் | பகுதி நேரம் |
| 1. | தமிழ் | ✓ | ✓ | ✓ | ✓ |
| 2. | ஆங்கிலம் | ✓ | ✓ | ✓ | ✓ |
| 3. | கணிதம் | ✓ | ✓ | ✓ | ✓ |
| 4. | இயற்பியல் | ✓ | ✓ | ✓ | ✓ |
| 5. | வேதியியல் | ✓ | ✓ | ✓ | ✓ |
| 6. | விலங்கியல் | ✓ | - | ✓ | ✓ |
| 7. | உயிர்வேதியியல் | ✓ | ✓ | ✓ | ✓ |
| 8. | புவியியல் | ✓ | - | ✓ | ✓ |
| 9. | பொருளியல் | ✓ | - | ✓ | ✓ |
| 10. | இந்தியப்பண்பாடு மற்றும் சுற்றுலாவியல் | ✓ | ✓ | ✓ | ✓ |
| 11. | வரலாறு | ✓ | - | ✓ | ✓ |
| 12. | வணிகவியல் | ✓ | - | ✓ | ✓ |

# தேர்வு நெறிமுறைகள்

(பருவத் தேர்விற்கான நெறிமுறைகள்)

1. மாணவர்கள் ஒவ்வொரு பருவ இறுதியிலும் நவம்பர் / டிசம்பர், மற்றும் ஏப்ரல் / மே மாதங்களில் தேர்வுகள் எழுதலாம்.

2. மாணவர்கள் தேர்வு எழுதுவதற்கான விண்ணப்பம் மற்றும் வங்கியில் தேர்வுக்கட்டணம் செலுத்துவதற்கான வங்கி செலுத்துச் சீட்டு ஆகியவை தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலகத்திலிருந்து துறைகளுக்கு அனுப்பப்படும். பொறுப்பாசிரியர் வழியாக மாணவர்கள் விண்ணபத்தினை பெற்றுக்கொண்டு தவறு இல்லாமல் பூர்த்தி செய்து, தேர்விற்கான கட்டணத்தை IOB - நீதிமன்ற கிளையில் (Court Branch) செலுத்தி அதனை COE இரசீதுடன் இணைத்து குறிப்பிட்ட தேதிக்குள் பொறுப்பாசிரியரிடம் ஒப்படைக்க வேண்டும். 2021 - 22 கல்வியாண்டு முதல் தேர்வுக்கட்டணங்களை இணைய வழியில் செலுத்தும் வசதியும் செய்யப்பட்டுள்ளது.

3. இறுதி நாள் என்று குறிப்பிட்டிருக்கும் நாளுக்குப் பிறகு வந்து சேரும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. அவ்வாறு ஏற்றுக்கொள்ளப்படாத விண்ணபத்திற்கான கட்டணத்தை திரும்பப் பெறவோ அல்லது அடுத்தப் பருவத்தேர்விற்கோ உரிமை கோர இயலாது.

4. பட்டம் பெறத் தகுதியான இறுதியாண்டு மாணவர்கள் மட்டும், மொத்த மதிப்பெண் பட்டியல் பெற, தற்காலிகப் பட்டம் (Provisional), பட்டச் சான்று பெற பல்கலைக்கழகத்திற்கு செலுத்த வேண்டிய உரிய கட்டணத்தை இறுதிப் பருவத் தேர்வுக் கட்டணத்துடன் செலுத்த வேண்டும்.

5. ஒவ்வொரு மாணவரும் தேர்வு அனுமதிச் சீட்டுப் பெற்றவுடன் தங்கள் பெயர், தலைப்பெழுத்து, வகுப்பு, எழுத வேண்டிய பாடக் குறியீடுகள் சரியாக உள்ளதா? என்று சரிபார்த்துக் கொள்ள வேண்டும். தவறுகள் இருப்பின் பத்தி 6-ல் உள்ள விதிமுறைகளைப் பின்பற்றவும்.

6. தேர்வு நடைபெற்ற பின் பாடத் திட்டத்தில் இல்லாத கேள்விகள் இருந்தால் அவற்றைத் துறைத்தலைவரின் ஒப்புதலுடன் எழுத்துப் பூர்வமாக அளிக்க வேண்டும்.

7. மாணவர்கள் தேர்வு தொடர்பான தங்கள் குறைகளை எழுத்து மூலம் துறைத்தலைவரின் அனுமதி பெற்று தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலகத்தில் கொடுக்கலாம்.

8. அனைத்துப் பாடங்களிலும், மாணவர்கள் மறுமதிப்பீடு தேவையானால் உரிய கட்டணத்துடன் தேர்வு முடிவு வெளியான 10 தினங்களுக்குள் விண்ணப்பிக்கலாம்.

9. முதுநிலை இறுதியாண்டு மாணவர்கள் மார்ச் மாத இறுதிக்குள் தங்கள் திட்ட அறிக்கையின் ஒரு பிரதியை தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்ட பின்னர் வாய்மொழித்தேர்வு அன்று தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் ஒப்பம் பெற்ற ஆய்வேட்டை புற மற்றும் அக மதிப்பீட்டாளர்கள் கையொப்பம் பெற்று வாய்மொழித்தேர்வுகள் விவரத்தையும் பதிவு செய்து மீண்டும் தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலகத்தில் அன்றே சமர்பிக்க வேண்டும்.

10. தேர்வில் வெற்றி பெறாத மாணவர்களுக்கு அவர்கள் படித்த பாடத்திட்டத்தின்படி தேர்வு எழுத அனுமதி உண்டு.

11. படிப்பு முடித்து வெளியில் சென்ற தேர்வில் வெற்றி பெறாத மாணவர்களுக்கு அவ்வப்போது உள்ள நெறிமுறைகளின்படி விண்ணப்பம் வழங்கப்படும்.

12. முதல்வரின் அனுமதியின் பேரில் பல்கலைக்கழக ஆணை பெற்ற பிறகு மீளப்பயிலும் (Redo) மாணவர்களுக்கு ஒரு பருவம் மட்டும் அனுமதி வழங்கப்படும்.

13. தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலகத்திற்குள் வரும் மாணவர்கள் அவசியம் அடையாள அட்டை அணிந்திருக்க வேண்டும்.

14. தேர்வுக்கட்டணம் செலுத்தாத மாணவர்களின் தேர்வு விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு தேர்வு எழுத அனுமதிக்கப்படமாட்டார்கள்.

15. பல்கலைக்கழக விதிமுறைகளின்படி உரிய வருகைப் பதிவு உள்ள மாணவர்கள் மட்டுமே பருவத் தேர்வு எழுத அனுமதிக்கப்படுவார்கள்.

## மாற்றுச் சான்றிதழ் பெறுதல்

1. ஒரு மாணவர் கல்லூரியை விட்டு ஒரு பருவத்தின் நடுவில் வெளியேறினால் அப்பருவத்திற்குச் செலுத்தப்பட்ட கல்விக் கட்டணத்தில் அம்மாணவர்கள் எதுவும் திரும்பப் பெற இயலாது.
2. கட்டணங்கள் அனைத்தும் செலுத்திய பின்னர் ஒரு பருவ முடிவில் மாணவர் வெளியேறினால் அவருக்குக் கட்டணம் பெற்றதற்கான சான்றிதழ் அளிக்கப்படும்.
3. ஒரு மாணவர் தாம் கல்லூரியில் சேர்ந்த ஒருபருவத்தின் ஏதாவது ஒரு நாளில் கல்லூரியை விட்டு விலகி ஓராண்டு சென்றபின் மாற்றுச் சான்றிதழுக்கு விண்ணப்பித்தால் அவர் எல்லாக் கட்டணங்களையும், தண்டத்தொகையினையும் செலுத்திய பின்னர் அச்சான்றிதழ்கள் வழங்கப்படும்.
4. கல்லூரியை விட்டு வெளியேறி ஒரு வருடம் ஆனபின் இச்சான்றிதழ்களுக்கு ஒரு மாணவர் விண்ணப்பித்தால் மாற்றுச் சான்றிதழ்களுக்கு ரூபாய் மூன்று தண்டமாகச் செலுத்த வேண்டும். அச்சான்றிதழ்களின் நகல்கள் ஒவ்வொன்றுக்கும் ரூ. 1 /– பெறப்படும்.
5. படிப்பு முடிந்து கல்லூரியை விட்டு வெளியேறும் மாணவர்களும், படிப்பு முற்றுப்பெறாமல் இடையிலேயே கல்லூரியிலிருந்து விலகும் மாணவர்களும், மாற்றுச் சான்றிதழை உடனடியாகப் பெற்றுக் கொள்ளும்படி கோரப்படுகிறார்கள். தவறினால் அவர்கள் தாமதக் கட்டணம் செலுத்த நேரிடுவதோடு அச்சான்றிதழ்களைப் பெறுவதில் கால தாமதம் ஏற்படலாம்.
6. ஆண்டு முடிவில் அம்மாணவர் வெளியேறினால் ஆண்டுச் சான்றிதழையும் பெறுவார். அதற்கு முதல்வர் கருதினால்
   (1) அவர் முன்னேற்றமும் நடத்தையும் நன்றாக இருக்க வேண்டும்.
   (2) பல்கலைக்கழக விதிகளின்படி அவர் வருகைப்பதிவு போதுமானதாக இருக்க வேண்டும்.

## வருகைப் பதிவும் விடுப்பும்

1. எந்த ஒரு மாணவரும் விடுப்பு விண்ணப்பம் இன்றி கல்லூரிக்கு வராமல் இருக்க அனுமதிக்கப்படுவதில்லை. விடுப்பு விண்ணப்பம் முன்னதாகவே கீழ்க்கண்ட முறையில் கற்பிப்பாளர் வழியாகத் துறைத் தலைவருக்கு அனுப்பப்பட வேண்டும்.
   அ. பெயர், ஆ. பதிவு எண். இ. வகுப்பு, பிரிவு ஈ. விடுப்பு வேண்டும் நாட்கள், உ. விடுப்பிற்கான காரணம், ஊ. பெற்றோர்/பாதுகாவலர் கையொப்பம், எ.மாணவர் கையொப்பம், ஏ. கற்பிப்பாளர் பரிந்துரை.
2. உடல்நலமின்மைக் காரணமாக மூன்று நாட்களுக்கு மேல் வராமலிருந்தால் மேற்கண்டவாறு விடுப்பு விண்ணப்பத்துடன் மருத்துவச் சான்றிதழ் இணைக்க வேண்டும்.

3. ஒரு மாணவர் 5 நாட்களுக்கு மேல் தொடர்ந்தோ அல்லது விட்டு விட்டோ விடுப்பு இல்லாமல் வகுப்புகளுக்கு வராவிடில் துறைத்தலைவர் இதனை முதல்வர் கவனத்திற்கு கொண்டு வருவார். அம்மாணவரின் பெயர் வருகைப் பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டு விவரம் பெற்றோருக்கு அறிவிக்கப்படும். அப்படிப்பட்ட மாணவர் தக்க விளக்கம் கொடுத்தால் மீண்டும் கல்லூரியில் அனுமதிக்கப்படுவார். இரண்டாம் முறையும் இவ்வாறு கல்லூரிக்கு வராமல் இருந்தால் அவர் பெயர் பதிவேட்டிலிருந்து நிரந்தரமாக நீக்கப்படும்.

4. வருகைப்பதிவில் நான்கில் மூன்று பங்கு பெற ஒரு மாணவர் தவறிவிட்டால், முதல்வர் மூலம் பருவத்தேர்வுக்கு விண்ணப்பித்து மன்னிப்பு பெறும்வரை பருவத்தேர்வுக்குச் செல்ல இயலாமல் நிறுத்தப்படக் கூடும்.

5. கல்லூரிக்குத் தவறாமல் வருகைதந்து 100 சதவிகிதம் வருகைப் பதிவுள்ள மாணவர்களுக்கு நற்சான்றிதழ் வழங்கப்படும்.

6. 90 சதவிகிதம் வருகைப்பதிவுள்ள மாணவர்கள் மட்டுமே உதவித் தொகையினைப் பெறத் தகுதியுடையவர்கள் ஆவர்.

7. **முதலாமாண்டு முதற்பருவத்தில் 50 சதவிகிதம் வருகைப்பதிவு ஈட்டாத மாணவர்கள் இரண்டாவது பருவத்தில் தொடர்ந்து படிக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள். வருகைப்பதிவு குறைந்த மாணவர்கள் தங்களது மாற்றுச்சான்றிதழைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.**

## கட்டண விவரங்கள் (மாறுதலுக்குட்பட்டது)

## அரசுக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| 1. | கல்விக் கட்டணம் (இரு பருவத்திற்கு) | | |
| | இளநிலை / முதுநிலைக் கல்விகட்டணம் | இல்லை | |
| | கணினிப் பயிற்சித் திட்டம் (Non - Computer Science Degree 1st Year Student only.) | ரூ. | 700.00 |
| | முதுகலை ஆய்வகக் கட்டணம் | ரூ. | 30.00 |
| | இளநிலை ஆய்வகக் கட்டணம் | ரூ. | 20.00 |
| 2. | மருத்துவக் கட்டணம் (இளநிலை மற்றும் முதுநிலை முதலாம் ஆண்டு மட்டும்) | ரூ. | 5.00 |
| 3. | சேர்க்கைக் கட்டணம் | ரூ. | 5.00 |
| 4. | மதிப்பெண் சான்றிதழ் சரிபார்ப்புக் கட்டணம் (சான்றிதழ் ஒன்றுக்கு) (இளநிலை சேர்க்கையின்போது மட்டும்) | ரூ. | 50.00 |

## தன்வைப்புக் கணக்கு –1

| தனிக்கட்டணம் | | *இளநிலை | *முதுநிலை |
|---|---|---|---|
| 1. | பேரவை | ரூ. 20.00 | ரூ. 20.00 |
| 2. | கல்லூரி நாள் | ரூ. 10.00 | ரூ. 10.00 |
| 3. | நூலகக் கட்டணம் | ரூ. 15.00 | ரூ. 15.00 |
| 4. | விளையாட்டுக் கட்டணம் | ரூ. 100.00 | ரூ. 100.00 |
| 5. | காட்சிக் கல்வி | ரூ. 10.00 | ரூ. 10.00 |
| 6. | கல்லூரி மலர் | ரூ. 10.00 | ரூ. 10.00 |
| 7. | கையேடு | ரூ. 10.00 | ரூ. 10.00 |
| 8. | பருவத்தேர்வு எழுதுபொருள் | ரூ. 50.00 | ரூ. 50.00 |
| 9. | கணிப்பொறி எழுதுபொருள் கட்டணம் | ரூ. 100.00 | ரூ. 200.00 |
| 10. | சமுதாய சமூக நலம் | ரூ. 10.00 | ரூ. 10.00 |
| 11. | கவின் கலை | ரூ. 10.00 | ரூ. 10.00 |
| 12. | தொழிற்கல்வி - இந்தியப் பண்பாடு & சுற்றுலாவியல் பாடப்பிரிவுக்கு மட்டும் கூடுதல் கட்டணம் | ரூ. 200.00 | ரூ. 200.00 |

## தன்வைப்புக் கணக்கு –2

| | | *இளநிலை | *முதுநிலை |
|---|---|---|---|
| 1. | பால நிதி | ரூ. 100.00 | ரூ. 100.00 |
| 2. | பல்கலைக்கழகப் பதிவு கட்டணம் | ரூ. 100.00 | ரூ. 200.00 |
| 3. | பல்கலைக்கழக அங்கீகாரம் | ரூ. 250.00 | ---- |
| 4. | பட்டமளிப்பு விழாக் கட்டணம் | ரூ. 75.00 | ரூ. 75.00 |
| 5. | செஞ்சிலுவைச் சங்கக் கட்டணம் | ரூ. 60.00 | ரூ. 40.00 |
| 6. | மெட்ரிக்குலேசன் | ரூ. 100.00 | ---- |
| 7. | விளையாட்டுக் கட்டணம் (பல்கலைக்கழகம்) | ரூ. 300.00 | ரூ. 300.00 |
| 8. | விபத்து காப்புறுதித் திட்டக் கட்டணம் | ரூ. 75.00 | ரூ. 50.00 |
| 9. | நாட்டு நலப்பணித் திட்டம் | ரூ. 10.00 | ரூ. 10.00 |
| 10. | கொடி நாள் | ரூ. 10.00 | ரூ. 10.00 |
| 11. | பல்கலைக்கழக வளர்ச்சி நிதி | ரூ. 40.00 | ரூ. 40.00 |
| 12. | பல்கலைக்கழகப் பண்பாட்டுக் கட்டணம் | ரூ. 50.00 | ரூ. 50.00 |
| 13. | இளைஞர் மேம்பாட்டுக் கட்டணம் | ரூ. 90.00 | ரூ. 100.00 |
| 14. | பகுதி IV –க்கான கட்டணம் | ரூ. 100.00 | ரூ. 100.00 |
| 15. | கணினி அறிவு பயிற்சித் திட்டம் (CLP ) | ரூ. 700.00 | ---- |

*இளநிலை (B.A.,/B.Sc.,/B.Com.,/ B.B.A.,/B.C.A.,) *முதுநிலை (M.A.,/M.Sc.,/M.Com., M.C.A.,)

## எம்.ஃபில்., பிஎச்.டி முழு / பகுதி நேரக் கட்டணங்கள்

பல்கலைக் கழக விதிகளுக்குட்பட்டது.

பாரதிதாசன் பல்கலைக்கழக இணைய தளம் மூலமாக அறிந்து கொள்ளலாம்.

* கட்டணங்கள் மாறுதலுக்கு உட்பட்டது.

| **தன்னாட்சித் தேர்வுக் கட்டண விவரங்கள்** | பட்ட வகுப்பு | பட்ட மேற்படிப்பு வகுப்பு | எம்.ஃபில் |
|---|---|---|---|
| விண்ணப்பக் கட்டணம் | 50.00 | 50.00 | 100.00 |
| மதிப்பெண் பட்டியல் | 100.00 | 100.00 | 150.00 |
| **எழுத்துத் தேர்வு THEORY PAPER** (தாள் ஒன்றுக்கு) | 75.00 | 150.00 | 750.00 |
| M.C.A., | | 300.00 | |
| **செய்முறை (PRACTICALS)** | | | |
| மூன்று மணி நேரத்தேர்வு | 100.00 | 200.00 | |
| நான்கு மணி நேரத்தேர்வு | | 250.00 | |
| ஆறு மணி நேரத்தேர்வு | 200.00 | 350.00 | |
| M.C.A - மூன்று மணி நேரத் தேர்வு | | 350.00 | |
| **திட்டக்கட்டுரை (PROJECT)** | 200.00 | 400.00 | 3000.00 |
| திட்டக்கட்டுரை (PROJECT) - M.C.A., | | 500.00 | |
| *தொகுப்பு மதிப்பெண் பட்டியல் Cumulative Mark Statement | 200.00 | 200.00 | 200.00 |
| *தற்காலிகப் பட்டச்சான்றிதழ் Provisional Certificate | 200.00 | 200.00 | 200.00 |
| *பட்டச் சான்றிதழ் | 800.00 | 800.00 | 800.00 |
| M.Phil., கால நீட்டிப்பு – I | | | 1500.00 |
| M.Phil., கால நீட்டிப்பு – II | | | 3000.00 |
| M.Phil., மறு பதிவு | | | 1500.00 |
| *இறுதிப்பருவ மாணவர்கள் மட்டும். | | | |

### இதரக் கட்டணங்கள்

பெற்றோர், ஆசிரியர் கழகப் பதிவுக்காக உரிய தொகை செலுத்த வேண்டும்.

## ஆண்டுச் சான்றிதழ்கள்

1. மாணவர்களுக்கு ஆண்டுச் சான்றிதழ் அளிக்கக் கீழ்க்கண்டவை தேவை:

   (அ) அம்மாணவர் கல்வியாண்டில் கல்லூரியில் விதிக்கப்பட்டுள்ள வருகைப் பதிவில் நான்கில் மூன்று பங்கைப் பெற்றிருக்க வேண்டும்.

   (ஆ) கல்லூரி நிர்வாகத்தினர் நிறைவுக்கேற்ப கல்வி பயின்றிருக்க வேண்டும்.

   (இ) அம்மாணவருடைய முன்னேற்றமும், நன்னடத்தையும் நிறைவாக இருக்க வேண்டும்.

2. (அ) அடிக்கடி கல்லூரிக்கு வராமல் இருக்கும் மாணவர் படிப்பை நிறைவாக முடித்தவராகக் கருதப்படமாட்டார்.

   (ஆ) வேலை நாட்களில் நான்கில் ஒரு பங்கு வராமலிருக்க உரிமை கேட்க இயலாது.

3. அனைத்து மாணவ, மாணவியரும் உடற்கல்வி வகுப்புகளில் திருப்தியளிக்கும் வகையில் பங்கேற்க வேண்டுமென அறிவுறுத்தப்படுகிறது.

## ஆய்வகப் படிப்புகள்

1. தேர்வு அனுமதிக்கான வருகைப்பதிவு எழுத்துத் தேர்வுக்கும், செய்முறைத் தேர்வுக்கும் தனித்தனியே கணக்கிடப்படும். கல்வியாண்டின் எல்லா செய்முறை வகுப்புகளில் நான்கில் மூன்று பங்கு வருகைப் பதிவை ஒரு மாணவர் பெற்றிருக்க வேண்டும். மேலும் மாணவர் தனது செய்முறை வகுப்புக்குரிய ஆசிரியரிடம் மட்டுமே அவ்வாண்டின் செய்முறை தேர்வுக்கு அனுமதிக்கப்படுவர். அவ்வாறு வருகைப்பதிவும், செய்முறைப் பதிவேட்டில் சான்றும் பெறாத மாணவர்கள் கண்டிப்பாக செய்முறைத் தேர்வுக்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

2. ஆய்வகப் பாடங்களில் திட்டமிட்ட சோதனைப் பயிற்சிகள் இன்றி முன்னேற்றம் இருக்காது என்பதால் மாணவர்கள் அதில் ஈடுபாடும் கவனமும் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

3. எந்த நிலையிலும் செய்முறைக் குறிப்புகளைக் குறிக்க உதிரி வெற்றுத் தாள்களை பயன்படுத்தக் கூடாது.

4. சீராகவும் ஒழுங்காகவும் இருக்கவேண்டும் என்ற காரணத்தால் புத்தகங்கள், ஏடுகள் முதலியன விதித்துள்ளபடியே வாங்கப்படவேண்டும்.

## மாணவ / மாணவியரின் ஒழுக்க நெறிகள்

1. மாணவர்கள் தக்க தூய ஆடை அணிந்து கல்லூரிக்கு வரவேண்டும்.
2. மாணவர்கள் கல்லூரிக்குள் கட்டாயமாக அடையாள அட்டை அணிய வேண்டும்.
3. கல்லூரி எல்லைக்குள் ஆசிரியர்களை முதன்முதலில் காணும்போது ஒவ்வொரு மாணவரும் வணக்கம் செலுத்த வேண்டும்.
4. காலையிலும், மாலையிலும் முதல் மணி அடித்தவுடன் மாணவர்கள் வகுப்பிற்கு சென்று அமர வேண்டும். இரண்டாவது மணி அடிப்பதற்குள் ஆசிரியர் வகுப்பிற்கு வந்துவிடுவார். இரண்டாம் மணி அடித்தவுடன் பாடம் தொடங்கப்படும்.
5. ஆசிரியர் வகுப்பில் நுழைந்து இருக்கையில் அமரும் வரையும் வகுப்பை விட்டு வெளியேறும்போதும் மாணவர்கள் எழுந்து நிற்க வேண்டும்.
6. பேராசிரியர்கள் மாணவர்களைக் கலைந்துபோக அனுமதி அளித்தாலொழிய அவர் வகுப்பை விட்டு வெளியேறும் வரை அவர் அனுமதியின்றி வெளியே செல்லக் கூடாது.
7. வகுப்பு நேரங்களில் பிற வகுப்புகளுக்குத் தொல்லை தரும் வகையில் மாணவர்கள் வழிநடையில் அலையக் கூடாது.
8. வகுப்பு இல்லையெனில் மாணவர்கள் படிக்கும் அறைக்கு அல்லது நூலகத்துக்கு அமைதியாகச் செல்லவேண்டும்.
9. ஒரு வகுப்பிலிருந்து மற்றொரு வகுப்பிற்குச் செல்லும்போது மாணவர்கள் ஏதும் தொல்லை தரக்கூடாது.
10. கல்லூரியுடன் தொடர்பில்லாத எந்த ஒரு சங்கம், கட்சி இவற்றில் எந்த ஒரு மாணவரும் முதல்வர் அனுமதியின்றி உறுப்பினராக இருக்கக் கூடாது. சமுதாய விரோதச் செயல்களில் ஈடுபடக்கூடாது. இவ்விதிகளை மீறுகின்ற மாணவர்கள் உடனே கல்லூரியிலிருந்து நீக்கப்படுவர்.
11. கல்லூரிக்குள் அல்லது வெளியில் கூட்டம் கூட்டுதல், அதில் பங்கு கொள்ளுதல், அதற்காக நிதி திரட்டுதல் ஆகியன முதல்வர் அனுமதியின்றி எந்த ஒரு மாணவரும் செய்யக்கூடாது.
12. ஓர் ஆசிரியர் மாணவருடைய நடத்தையில் ஏதும் குற்றம் கண்டால் உடனே அது மாணவருடைய கற்பிப்பாளருக்கு அல்லது முதல்வருக்கு அறிவிக்கப்படும். கடுமையான குற்றம் எனில் அதுபற்றி முதல்வருடைய கவனம் எழுத்துமூலம் ஈர்க்கப்படும். இதுபோன்றவற்றில் துறைத்தலைவர் எடுக்கும் முடிவே இறுதியானது.
13. கல்லூரியின் உள்ளும், வெளியும், மாணவர்கள் தாங்களாகவே நன்முறையில் மதிப்புடன் நடந்து அவர்களைச் சார்ந்துள்ள மாணவச் சமுதாயத்தையும் மற்றும் கல்லூரியின் பெருமையினையும், மதிப்பினையும் நிலைநிறுத்துமாறு எதிர்பார்க்கப்படுகின்றனர்.

14. மாணவர் ஒவ்வொருவரும் காலையும், மாலையும் அறிவிப்புப் பலகையில் கண்ணோட்டம் செலுத்த வேண்டும்.
15. பாலத்தின் அருகேயும், வடக்கு வாயிலிலும் உள்ள கொட்டகையில் மிதிவண்டிகளை நிறுத்தவேண்டும். கல்லூரி முற்றத்தில் நிறுத்தக் கூடாது.
16. வகுப்பில் அவரவர் இருக்கையில் வரிசை எண்ணுக்கு தக்கவாறு ஆசிரியர் சொற்படி அமர வேண்டும்.
17. ஆசிரியர்களால் அளிக்கப்படும் அவரவர்க்குரிய வீட்டுப்பாட வேலைகளை மாணவர்கள் கவனத்தோடும், ஒழுங்கோடும் உரிய காலத்தில் முடித்து ஏடுகளைத் தரவேண்டும்.
18. மாணவர்கள் வகுப்பிற்கு உரிய நேரத்தில் வரவேண்டும். காலம் தாழ்த்தி வருவோர் துறைத்தலைவரைப் பார்த்து அவர் அனுமதி பெற்ற பின்னரே வகுப்பிற்குச் செல்ல வேண்டும். துறைத்தலைவர் அனுமதிக்காவிடில் காலம் தாழ்த்தி வருவோர் வகுப்பிற்குச் செல்ல இயலாது.

## மிகவும் முக்கியமாகக் கடைப்பிடிக்க வேண்டியவை

1. கல்லூரிக்கு உள்ளும், புறமும் மாணவிகளைக் கேலி செய்தல் (Eve Teasing) என்பது தமிழக அரசு பிறப்பித்துள்ள ஆணையின்படி தண்டனைக்குரிய குற்றமாகும். இதில் சம்பந்தப்பட்ட மாணவர்கள் கல்லூரியை விட்டு உடனடியாக நீக்கப்படுவதுடன் காவல் துறையினர் வசம் ஒப்படைக்கப்படுவர்.

2. கல்லூரியில் புதிதாகச் சேர்ந்திருக்கும் மாணவ, மாணவிகளிடம் ஏற்கனவே பயின்றுவரும் மாணவ, மாணவியர்கள் சகோதரத்துவத்துடன் பழக வேண்டும் என்பது அனைவரும் அறிந்ததே. இதனைத் தவிர்த்து புதிய மாணவ, மாணவியரை ரேக்கிங் செய்வதை குற்றமாகக் கருதி அரசாணை எண்.632-ன்படி இரண்டு ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை அளிக்கப்படுவதுடன் ரூபாய் 10,000/- வரை அபராதம் விதிக்கப்படும்.

3. மாணவர்களையோ, மாணவிகளையோ வகுப்பு நடைபெறும் நேரத்தில் பிற வகுப்பு மாணவ, மாணவிகள் சந்தித்தல் மற்றும் வெளியே அழைத்துப் பேசுதல் கண்டிப்பாக அனுமதிக்க முடியாததாகும். மேலும் வகுப்பு நடைபெறுவதற்கு இடையூறு செய்தல் மற்றும் வராண்டாவில் நடத்தல் ஆகியன கூடாது.

4. மாணவ, மாணவியரின் உறவினரோ, பெற்றோரோ தவிர்க்க முடியாத காரணங்களுக்காக, வகுப்பு நடைபெறும்போது சந்திக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால், அவர்கள் முதலில் சம்பந்தப்பட்ட துறைத்தலைவர் மற்றும் பொறுப்பாசிரியரை அணுகி அவர்களின் அனுமதியுடன் மாணவ, மாணவிகளைத் துறையின் அலுவலக அறைக்கு அழைத்துவந்து சந்தித்தல் வேண்டும்.

## கற்பிப்பாளரின் பொறுப்புகள்

1. கற்பிப்பாளர் ஒவ்வொருவரும் அவருக்கு அளிக்கப்படும் குறிப்பேட்டில் அவர் பொறுப்பில் உள்ள மாணவர்களைப் பற்றிய குறிப்புகளைப் பதிந்து வைத்திருக்க வேண்டும்.

அ. மாணவர் பெயர்

ஆ. மாணவர் எண்ணும், வகுப்பும், அ(தொ)லைபேசி தொடர்பு எண்ணும்

இ. தந்தை அல்லது பாதுகாப்பாளருடைய பெயரும், தொழிலும்

ஈ. உள்ளூர் காப்பாளரின் பெயர், தொழில், முகவரி

உ. பெற்றோர் அல்லது பாதுகாப்பாளருடைய வருவாய்.

ஊ. மாணவர் உதவித் தொகை பெறுபவர் எனில் அதன் பெயரும், தொகை விளக்கமும்

(எ) பாடமல்லாத பிறவற்றிலுள்ள விருப்பம்

(ஏ) விளையாடும் விளையாட்டுகள்

2. மாணவர்களின் அனைத்து விடுப்பு விண்ணப்பங்களும் அவர்களுக்குரிய கற்பிப்பாளரிடமே பணிந்து அனுப்பப்பட வேண்டும்.

3. விடுப்பு அனுமதிக்கப்படும்போது கற்பிப்பாளர் தன்னுடைய குறிப்பேட்டில் அம்மாணவர் பெயருக்கு எதிரே அதைக் குறிக்க வேண்டும்.

4. ஒரு பருவத்தில் தேவையான வருகைப்பதிவு ஒரு மாணவர் பெறத் தவறினால் வருகைப்பதிவின் பொறுப்பிலுள்ள ஆசிரியர் அதுபற்றி முதல்வரின் கவனத்திற்குக் கொண்டுவரவேண்டும். முதல்வர் தக்க நடவடிக்கை எடுப்பார்.

5. ஒவ்வொரு பருவ முடிவிலும் கற்பிப்பாளர்கள் மாணவர்களின் முன்னேற்ற அறிக்கையினைத் தயார்செய்து முதல்வர் வழியாக பெற்றோர்களுக்கு அல்லது பாதுகாப்பாளருக்கு அனுப்புவார்கள்.அந்த அறிக்கையினை தயார் செய்யும் போது மாணவர்கள் பெற்றுள்ள மதிப்பெண்கள், வருகைப்பதிவு போன்ற விவரங்களைக் குறிப்பேட்டில் குறித்தல் வேண்டும். இது மிகவும் இன்றியமையாதது. ஏனெனில் உதவித் தொகை அனுமதிக்கப்படும்போது மாணவர்களின் ஒழுங்கு நடத்தை, முன்னேற்றம் குறித்த விவரங்களைக் கற்பிப்பாளரிடமிருந்து முதல்வர் பெறுவார். தம் வகுப்பு மாணவர்களின் வருகைப்பதிவு தேவையான அளவினின்று குறையும்போது கற்பிப்பாளர் அதனை அவர்களுக்கு அறிவிக்கவேண்டும்.

6. மாணவர்களுக்குப் பேருந்து, புகைவண்டிச் சலுகைக்கான விண்ணபப்பங்கள், உதவித்தொகை விண்ணப்பங்கள் அனைத்தும் கற்பிப்பாளர் வழியேதான் வரவேண்டும்.

7. ஒரு மாணவர் ஐந்து நாட்களுக்கு மேல் தொடர்ந்தாற்போலோ அல்லது விட்டு விட்டோ விடுப்புக் கடிதம் இல்லாமல் வகுப்புகளுக்கு வராவிடில் கற்பிப்பாளர் இதனைத் துறைத் தலைவர் கவனத்திற்குக் கொண்டுவரவேண்டும்.

## கல்லூரி நூலகம்

1. நூலகம் கல்லூரி மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் உரியது.
2. நூல்களைத் தரும் வழியில்தான் நூல்களைத் தரவும், பெறவும் வேண்டும்.
3. நூலகத்தில் அமைதியும், ஒழுங்கும் கடைப் பிடிக்கப் படவேண்டும்.
4. கல்லூரி அனைத்து வேலை நாட்களிலும் கல்லூரி வேலை நேரத்தின்போது நூலகம் திறந்திருக்கும்.
5. மாணவர்கள் ஒவ்வொருவரும் நூலகத்தில் நூல் எடுக்க கல்லூரி அடையாள அட்டையைப் பயன்படுத்த வேண்டும். பட்ட வகுப்பு மாணவர்கள், ஆய்வியல் நிறைஞர் மாணவர்கள் மற்றும் முனைவர் பட்ட ஆராய்ச்சி மாணவர்கள் முறையே 3, 4, 5 நூல்கள் எடுக்க அனுமதிக்கப்படுவர்கள். ஒரு நூலை எடுக்கும்போதும் திருப்பி அளிக்கும்போதும் அடையாள அட்டையைக் காண்பிக்க வேண்டும்.
6. ஒரு புத்தகத்தினைப் பெறும்போது பக்கங்கள் கிழிந்திருந்தால், பக்கம் இல்லாமை, கிறுக்கல்கள் போன்ற குறைகளை மாணவர்கள் நூலகர் கவனத்திற்குக் கொண்டுவரவேண்டும். இல்லையெனில் அவைகளுக்கு அம்மாணவரே பொறுப்பாவார்.
7. எடுத்த நாளிலிருந்து 15 நாட்களுக்குள் அல்லது சில சமயம் அதற்குக் குறைந்த நாளில் நூல்களைத் திருப்பித் தரவேண்டும். திருப்பித் தரும் நாள் விடுமுறையாக இருப்பின் அதனை அடுத்த வேலை நாளில் அதைத் திருப்பித் தரவேண்டும். இது புத்தகம் திருப்பித் தரப்படும் நாளிலிருந்து 3 நாட்களுக்கு மேற்படாத விடுமுறை உள்ளபோதுதான். விடுமுறை 3 நாட்களுக்கு மேற்படுமானால் விடுமுறை தொடங்கும் முன்பே திருப்பப்படல் வேண்டும்.
8. குறிப்பிட்ட நாள் கடந்தால் ஒரு நாளைக்கு 1/– ரூபாய் வீதம் தண்டம் வசூலிக்கப்படும். நூலகத் தண்டம் செலுத்தாதவர்கள் அதைச் செலுத்தும் வரை நூல்கள் எடுக்க அனுமதிக்கப் படமாட்டார்கள்.
9. பல வகுப்புகளுக்கும் நூல்களுக்காக விண்ணப்பிக்கும் நாள் அவ்வப்போது அறிவிக்கப்படும்.

10. ஒரு குறிப்பிட்ட நூலுக்கு விண்ணப்பங்கள் நிறைய இருப்பின் அதற்குரிய நாள் ஏழாகக் குறைக்கப்படும்.

11. ஒரு நூல் குறிப்பிட்ட நாட்களுக்கு மேல் 15 நாட்களுக்குப் புதுப்பிக்கப்படும். அதற்கு (அ) எவரும் அதே நேரத்தில் அந்த நூலுக்கு விண்ணபித்திருக்கக் கூடாது.

(ஆ) ஒவ்வொரு முறை புதுப்பிக்கும் போதும் அப்புத்தகம் நூலகம் முன் வைக்கப்பட வேண்டும்.

12. மாணவர் நூல்களை மற்றவர்களுக்கு கடன் கொடுப்பதோ, வெளியாருக்குத் தருவதோ கூடாது.

13. ஒரு புத்தகம் மாணவரால் வீணடிக்கப்பட்டால் அவர் தண்டம் செலுத்தவேண்டி இருக்கும். முதல்வருடைய கருத்தின்படி புதியது ஒன்று வாங்கித் தரும்படி சொல்லப்படுவார். புதியது இல்லையெனில் புத்தகத்தின் பதிவு விலையுடன் 200% கூட்டி செலுத்தப்பட வேண்டும். ஒரு தொகுதியில் உள்ள புத்தகம் தொலைக்கப்பட்டு அதனைத் திருப்பித் தராவிட்டால் தொகுதி முழுவதற்கும் உரிய தொகை புத்தகம் பெற்றவரிடம் இருந்து பெறப்படும்.

14. அட்டவணைப்படுத்தவோ அல்லது வேறு எதற்காகவோ புத்தகத்தினை நூலகர் எந்த நேரத்திலும் உரிய நாளுக்கு முன்பாகவும் திரும்பக் கேட்கலாம்.

15. பார்வைக்குரிய நூல்களை வெளியே கொண்டுசெல்லக் கூடாது. அவை ஆசிரியர்களின் வகுப்பு உபயோகங்கட்குத் தரப்படும். அவை பயன் பட்டவுடன் திருப்பப்பட வேண்டும்.

16. ஒவ்வொரு ஆசிரியருக்கும் நூலகத்தில் நூல் எடுக்க அவருடைய அடையாள அட்டையைப் பயன்படுத்தி பத்து நூல்கள் எடுக்க அனுமதிக்கப்படுவார்கள். அதை வாங்கிய நாளிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் திருப்பப்பட வேண்டும்.

17. கல்லூரி மைய நூலகத்திலும், துறை நூலகத்திலும் புத்தகங்களை எடுத்து திருப்பியளிக்காத இறுதியாண்டு மாணவர்களுக்கு மாற்றுச்சான்றிதழ் எக்காரணம் கொண்டும் வழங்கப்படமாட்டாது.

## துறை நூலக விதிகள்

1. துறை நூல்கள் அந்தந்த துறைப்பேராசிரியர் பொறுப்பில் இருக்கும்.
2. பேராசிரியர் / துணைப்பேராசிரியர்களால் குறிப்பிடப்படும் நாட்களில் பிற்பகல் 2 மணிக்கு முன்னர் புத்தகங்களுக்கான விண்ணப்பங்கள் அளிக்க வேண்டும். மாலை 4.30 மணிக்குள் புத்தகங்கள் வழங்கப்படும்.
3. நூல் எடுத்த பதினைந்து நாட்களுக்குள் நூலகத்திற்கு நூல்கள் திருப்பப்பட வேண்டும். அதற்கு மேற்படும் ஒவ்வொரு நாளுக்கும் ரூ. 1/– வீதம் தண்டம் வசூலிக்கப்படும்.
4. பதினைந்து நாட்கள் முடிந்தபின் அதே புத்தகத்திற்கு வேறு ஒரு மாணவர் விண்ணப்பிக்காமலிருந்தால் மேலும் பதினைந்து நாட்கள் புதுப்பிக்கப்படும்.
5. ஆசிரியர்கள் ஒரு நேரத்தில் 10 நூல்களே வைத்திருக்கலாம். அவை வாங்கிய பதினைந்து நாட்களுக்குள் திருப்பப்பட வேண்டும்.

## புத்தக வங்கி விதிகளும் நெறிமுறைகளும்

1. அந்தந்த துறைக்குரிய புத்தக வங்கியிலிருந்து மாணவர்கள் புத்தகங்களைக் கடனாகப் பெறலாம்.
2. பட்ட வகுப்பு மாணவர்கள் ரூ.10/–ம், பட்ட மேற்படிப்பு மாணவர்கள் ரூ.25/–ம் முன்பணம் செலுத்தினால் ஒரு வருடத்திற்கு நூல்கள் வழங்கப்படும். அப்பணம் மாணவர்கள் கல்லூரியினை விட்டு வெளியேறும்போது திருப்பித் தரப்படும்.
3. கல்வியாண்டின் முடிவில் அதாவது மார்ச் மாதத்தில் மாணவர்களிடமிருந்து நூல்கள் திரும்பப் பெறப்படும்.
4. ஒரு புத்தகம் பழுதடைந்தாலோ, வீணானாலோ மாணவர் புதியதொன்றை வாங்கித் தரவேண்டும். அல்லது புத்தகத்தின் பதிவு விலையுடன் 200% கூடுதலாகச் செலுத்த வேண்டும். ஒரு தொகுதியிலுள்ள புத்தகம் பழுதடிக்கப்பட்டால் அல்லது தொலைக்கப்பட்டால் அந்த மாணவர் அத்தொகுதி நூல் அனைத்தையும் வாங்கித் தர (அ) உரிய முழுத்தொகையுடன் 200% கூடுதலாகச் செலுத்த வேண்டும். மாணவர்கள் புத்தகங்களைக் கடன் கொடுக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள்
5. முதல்வர் ஆணைப்படி புத்தகம் கடன் பெறாமல் எந்த நேரத்திலும் நீக்கப்படலாம்.
6. பொது நூலகத்தில் புத்தகங்கள் கடன் வழங்குவதற்கான பொது விதிகள் எல்லாம் புத்தக வங்கிக்கும் பொருந்தும்.

# உடற்கல்வி

## அ) விளையாட்டுகள் (SPORTS & GAMES)

### மாணவர்கள் (MEN)

1. இறகுப்பந்து **(Badminton)**
2. பூப்பந்து **(Ball Badminton)**
3. கால்பந்து **(Foot Ball)**
4. மட்டைப்பந்து **(Cricket)**
5. வலைப்பந்து **(Net Ball)**
6. சதுரங்கம் **(Chess)**
7. கையுந்துப்பந்து **(Volley Ball)**
8. சுண்டாட்டம் **(Carrom)**
9. சடுகுடு **(Kabaddi)**
10. கோ-கோ **(Kho-Kho)**
11. தடகளப்போட்டிகள் **(Track & Field)**

### மாணவிகள் (WOMEN)

1. இறகுப்பந்து **(Badminton)**
2. பூப்பந்து **(Ball Badminton)**
3. சதுரங்கம் **(Chess)**
4. சுண்டாட்டம் **(Carrom)**
5. மட்டைப்பந்து **(Cricket)**
6. சடுகுடு **(Kabaddi)**
